"பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" (மத்தேயு 5:12) என்று இயேசு கூறினார். ஆனால் அதை வாங்க நாம் பரலோகத்துக்குச் செல்ல வெண்டும் என்று ஒருபோதும் அவர் கூறவில்லை. ஏனெனில், "பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை" (யோவான் 3:13) என்று அவர் தெளிவாகப் பேசியுள்ளார். அதற்குப் பதிலாக நமது பலனைப் பூமியில் நம்மிடம் எடுத்துவருவதாகவும், இயேசு திரும்ப வருவதாகவும் கூறினார்: "இதோ, நான் சீக்கிரமாய் வருகிறேன். அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது" (வெளிப்படுத்தல் 22:12).

இந்தச்சிறு கைப்பிரதி நூல், இவ்வுலகப் பிரச்சனைகளைத் தீர்க்கும் வண்ணம் இயேசுகிறிஸ்து ராஜாதி ராஜாவாகத் திரும்பவும் பூமிக்கு வரப்போகிறதை வேதாகமத்தின் போதனையாக எடுத்துக் கூறுகிறது.


Christ is Coming Again! Tamil 1500 copies - 2008

- இலவச மாதாந்திர வேதாகம பத்திரிக்கை
- வேதாகம தொடர் அஞ்சல் வழி கல்வி
- அருகாமையில் நடைபெறும் வேதாகம கலந்துரையாடல் வேதஆராய்ச்சி

மேல் கூறப்பட்டுள்ளவைகளுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுதுங்கள்.

கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு தொடர்புக்கு
**கிறிஸ்டடெ.ஃல்பியன்ஸ்**
தபால் பெட்டி எண். 4237
பெங்களூர் - 560042. இந்தியா

வேறு இடங்களுக்கு
Elsewhere:
**Printland Publishers, GPO Box 159,**
**Hyderabad A.P. 500001, INDIA**



# கிறிஸ்து மீண்டும் வருகிறார் !

மால்கம் ஸ்கோற்

# கிறிஸ்து மீண்டும் வருகிறார்!

மால்கம் ஸ்கோற்

## முன்னுரை

நாம் சஞ்சரிக்கிறஉலகம் முரண்பாடுகள் நிறைந்த உலகம்.

இந்த உலகத்தில் அநேகர் வசதியான வாழ்க்கை வாழுகின்றனர். அவர்கள் தேவைகள் நிம்மதியாகச் சந்திக்கப்படுகின்றன. அவர்களுக்கு அருமையான வீடும், பத்திரமான வேலையும், தங்களால் தீர்க்கமுடியாத எந்தப் பிரச்சனையும் இல்லாமல் ஜீவிக்கிறார்கள்.

மறுபுறம், இந்த உலகத்தில் அநேகர் வறுமையின் கொடுமையில் சிக்கி, ஜனத்திரள் ஓரிடத்தில் குவிந்து விட்டதால் வரும் பிரச்சனைகளில் அகப்பட்டுத் தவிக்கிறார்கள். கோடிக் கணக்கானோர் தங்கள் குடும்பத்துக்குப் போதுமான ஆகாரம் அளிக்க முடியாமல் சங்கடப் படுகிறார்கள். இன்னும் கோடிக் கணக்கானோர் சுகாதார வசதியின்றி, கொள்ளை நோய்களின் பிறப்பிடங்களில் வசிக்கின்றனர். அப்படிப்பட்ட இடங்களில் தொழுநோய், காலரா, ஏய்ட்ஸ், க்ஷயரோகம் போன்றகொடிய நோய்களால் அவதிப்படுகின்றனர்.

இதுகுறித்து, தேசங்களின் நடுவே வேறுபாடுகள் நிலவி வருகின்றன. எப்போதும் எங்கேயாவது யுத்தம் நடந்து கொண்டுதான் இருக்கிறது. தேவையற்றஅரசியல் நோக்கங்களுக்காக அநேகர் மரிக்கின்றனர்.

உலக பிரச்சனைகளைக் குறித்து அரசியல்வாதிகளும், பொதுநலச் சேவை நிறுவனங்களும் அடிக்கடி சந்தித்துப் பேசி வந்தாலும், பிரச்சனைகள் தீர்ந்தபாடில்லை. உண்மையில் பலதரப்பட்ட அரசாங்கங்கள் - முடியரசு, குடியரசு, மக்களரசு, பொதுவுடமை அரசு, போன்றவை மூலம் முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்துள்ளன. எனினும், மனிதன் இன்னும் உலக பிரச்சனைகளில் சிக்கித் தவித்துக் கொண்டே இருக்கிறான். இதன் மூலம் நம்மைச் சுற்றியுள்ள பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண மனிதனால் முடியாது



என்று பட்டவர்த்தனமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

உலகிலுள்ள அநேகம் பிரச்சனைகள் மனிதருடைய தன்னிஷ்டத்துக்கு நேரடியாகச் சம்பந்தப்பட்டவை ஆகும். அதிகாரத்திலிருக்கும் ஆட்சிவகிப்பவர்கள் தங்கள் ஆதரவாளர்களுடன் சேர்ந்து, எதிர்க்கட்சியினரின் இழப்பீடுகளை எண்ணி மகிழ்வுடன் வாழ்கின்றனர். எங்கு பார்த்தாலும் மனிதன் தனக்காகவே வாழ்கின்றான்.

இந்தப் பிரச்சனைகளுக்கெல்லாம் தீர்வு ஒன்று ஏற்படுமா? இதற்கு “ஆம்“ என்று பதிலுரைத்தாலும், மனிதனால் இவ்வுலகின் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கமுடியாது என்பது உண்மையாகும். நாம் கேட்கக்கூடிய கேள்விகளுக்கு சரியான விடைகளைக் கண்டுபிடிக்கும்படி நம்முடைய வேதாகமத்தைத் திறந்த உள்ளத்துடன் வாசித்துப் பார்க்க வேண்டும். வேதாகமம் எதிர்காலத்தைக் குறித்து கூறுவதோடு, இந்த உலகத்தை மனிதன் சுகமாக வாழும் ஸ்தலமாக மாற்றுவதற்காகச் செய்ய வேண்டிய மேலான ஆலோசனைகளையும் கூறுகிறது. மனித.ன் தன்னந்தனியாக வாழும்படி கைவிடப்பட்ட சூழ்நிலையில் எல்லாவற்றையும் நாசமாக்கி, மோசத்திலிருந்து நாசத்திற்கு நடப்பான் என்று வேதாகமம் எச்சரித்துள்ளது. அதேசமயம் வேதாகமத்தின் தேவனை விசுவாசித்து நாம் அவரில் நம்பிக்கை வைப்போமானால், சமாதான காலமாகிய பாதுகாப்போடு இந்த உலகின் பிரச்சனைகள் தீர்ந்து, ஆசீர்வாதம் நிறைந்த ஒரு மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ முடியும் என்றும் வேதாகமம் வாக்குறுதி அளிக்கிறது.

தேவனுடைய குமாரனும் நமது கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்து உலகிற்கு மீண்டும் வரும்போது இப்படி சம்பவிக்கும் என்று வேதாகமம் நமக்குத் தெளிவுபடுத்துகிறது. இச்சிறு கைப்பிரதி நூலின் மூலம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீண்டும் வருகைக் குறித்தும், அவர் வரும்போது என்ன செய்யப்போகிறார் என்பதைக் குறித்தும் வேதாகமத்தின் போதனைகளைக் கருத்துடன் கவனிக்க விரும்புகிறோம்.

## இயேசு உலகிற்கு மீண்டும் வருவார்

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எதிர்காலத்தில் ஒருநாள்

பூமிக்குத் திரும்ப வருவார் என்று வேதாகமம் நமக்குப் போதிக்கிறது. இது புதிய ஏற்பாட்டில் நாம் கேட்டறிந்த ஒரு போதனையாகும். இயேசுகிறிஸ்து, தேவதூதர்கள், மற்றும் அப்போஸ்தலர்கள் அவர் பூமிக்குத் திரும்ப வருவார் என்று போதித்து வந்துள்ளனர்.

1. இயேசு தாம் பூமிக்குத் திரும்பி வரப்போகிறதைத் தம்முடைய சீஷர்களிடம் அறிவித்தார்.

''மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமைப்பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார். அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலன் அளிப்பார்'' (மத்தேயு 16:27).

2. தேவனுடைய தூதர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பூமிக்கு மீண்டும் வருவார் என்று நிச்சயப்படுத்தியுள்ளனர்.

" இதோ, வெண்மையான வஸ்திரம் தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்கள் அருகே நின்று: 'கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்' என்றார்கள்" (அப்போஸ்தலர் 1:10-11).

3. அப்போஸ்தலர்கள் தொடர்ந்து இயேசுகிறிஸ்து பூமிக்கு மீண்டும் வருகிறார் என்று போதித்து வந்தனர்.

"ஆனபடியாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும் நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள். உலகத் தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும்'' (அப்போஸ்தலர் 3:19-21).

இந்த வேதவசனங்களிலிருந்து இயேசுகிறிஸ்து நிச்சயமாக வானத்திலிருந்து இறங்கி வருவார் என்று வேதாகமம் உண்மையாகப் போதிப்பதை நாம் காணமுடிகிறது.



மேற்கூறின வசனங்களை உற்று நோக்கினால் அநேக முக்கிய வேதாகமப் போதனைகளை நாம் காணமுடியும். அவற்றில் முக்கியமாக:

அ. இயேசுகிறிஸ்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரம் பரலோகத்தில் இருக்கப்போகிறார்.

ஆ. அவர் தம்மோடு பலன்களைக் கொண்டு வருகிறார்.

நாம் இதுவரை வாசித்த வேதவாக்கியங்கள் மாத்திரம் இயேசுகிறிஸ்து பூமிக்குத் திரும்ப வரப்போகிறார் என்று நமக்குக் கூறவில்லை. மேலும் வேறு அநேக வேதவசனங்கள் அதே தேவசெய்தியை நமக்குக் கூறுகின்றன. அவைகளில் முக்கியமான சிலவற்றைஇங்கு பட்டியல் இடுகிறோம்.

1.கொரிந்தியர் 15:23. 1.தெசலோனிக்கேயர் 2:19, 5:23; 1.தீமோத்தேயு 6:13-15; 2.தீமோத்தேயு 1:10; 4:1,8; தீத்து 2:13, யாக்கோபு 5:7-8, 1.பேதுரு 1:7, 2.பேதுரு 1:16; 1.யோவான் 2:28.

வேதாகமப் போதனையின்படி இயேசுகிறிஸ்துவின் மீண்டும் வருகையை நாம் அப்படியே ஏற்றுக்கொண்டு புரிந்துகொள்ள வேண்டும். அவர் பூமியிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும்போது பார்த்துக் கொண்டிருந்த அப்போஸ்தலரிடம் அதே இயேசுவானவர் மீண்டும் வரப்போவதாக அறிவிக்கப்பட்டது. தாம் இந்தப் பூமிக்குத் திரும்பி வரப்போவதாக இயேசுவும் போதித்தார்.

இயேசு திரும்ப வரும்போது என்ன செய்யப்போகிறார்?

கர்த்தராகிய இயேசு பூமிக்கு மீண்டும் வரும்போது என்னென்ன செய்வார் என்று வேதாகமம் நமக்குப் போதிக்கிறது.

**1. இயேசு ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பார்**

நாம் ஏற்கனவே அப்போஸ்தலர் 1:11 யை வாசித்தோம். இந்த வேதபகுதியில் இரண்டு தேவதூதர்கள் இயேசு பூமிக்குத் திரும்பி வருகிறதைக் கூறினார்கள். இயேசு பரமேறுவதற்கு சற்றுமுன்புதான் சீஷர்கள் இயேசுவிடம் ஒரு கேள்வியைக் கேட்டிருந்தனர்.

''அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி:

‘ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் ?‘ என்று கேட்டார்கள்‘‘ (அப்போஸ்தலர் 1:6).

இயேசு ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்று சீஷர்கள் தெரிந்திருந்தனர். ஆகவேதான் சிலுவையில் அறையப்பட்டு மரித்து உயிர்த்தெழுந்த இயேசு இப்பொழுது “ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பார்“ என்று அவர்கள் எண்ணியிருந்தார்கள்.

இஸ்ரவேலுக்கு ராஜ்யத்தை இயேசு திரும்பக் கொடுப்பார் என்று சீஷர்கள் எதிர்பார்த்ததற்குச் சரியான பல காரணங்கள் உள்ளன. பழைய ஏற்பாட்டில் தொடர்ந்து கொடுக்கப்பட்ட தேவசெய்திகளின் அடிப்படையில், பூமியில் இப்பொழுதிருக்கிறராஜ்யங்களுக்கு மாற்றாக வேறொரு ராஜ்யம் ஸ்திரமாக ஸ்தாபிக்கப்படும் என்று எழுதப்பட்டுள்ளது.

“அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார். அந்த ராஜ்யம் வேறேஜனத்துக்கு விடப்படுவதில்லை. அது அந்த ராஜ்யங்களை எல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும். இனிமேல் சம்பவிக்கப் போகிறதை மகா தேவன் ...தெரிவித்திருக்கிறார். சொப்பனமானது நிச்சயம். அதன் அர்த்தம் சத்தியம்” (தானியேல் 2:44-45).

அந்த ராஜ்யத்தின் சிங்காசனம் எருசலேமில் நிலைவரப்படுவதுடன், அந்த ராஜ்யம் பூமியிலுள்ள அனைத்து மக்களையும் பாதிக்கும்.

‘‘அக்காலத்திலே எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள். சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அதினிடமாகச் சேருவார்கள். அவர்கள் இனித் தங்கள் பொல்லாத இருதயத்தின் இச்சையின்படி நடவார்கள்‘‘ (எரேமியா 3:17).

அந்த ராஜ்யத்தின் ராஜா நமது ஜீவியத்தைச் சரியான வழியில் நடத்தும்படி தேவனுடைய வழிகளை ஸ்தாபிப்பார். முன்னுரையில் முதலில் கூறினவற்றைநினைவுகூருங்கள். இன்று ‘‘உலகிலுள்ள அநேகம் பிரச்சனைகள் மனிதருடைய தன்னிஷ்டத்துக்கு நேரடியாகச் சம்பந்தப்பட்டவை ஆகும். அதிகாரத்திலிருக்கும்



ஆட்சிவகிப்பவர்கள் தங்கள் ஆதரவாளர்களுடன் சேர்ந்து, எதிர்க்கட்சியினரின் இழப்பீடுகளை எண்ணி மகிழ்வுடன் வாழ்கின்றனர். எங்கு பார்த்தாலும் மனிதன் தனக்காகவே வாழ்கின்றான்.“ என்றாலும் இந்தப் பூமியில் ஸ்தாபிக்கப்படப்போகும் ராஜ்யத்தில் ‘‘மனிதர் இனி தங்கள் பொல்லாத இருதயத்தின் இச்சைகளின்படி நடப்பதில்லை‘ என்பது ஆறுதல் தருகிறது.

ராஜ்யத்தின் மற்றொரு லக்ஷணம் என்னவென்றால், அனைவரும் தேவனுடைய வழிகளைக் கற்றுக்கொள்ள விரும்புவர். அது மாத்திரமல்லாது அனைத்து உலகத்தாரும் தேவனுடைய வழிகளைக் கற்கும்படி எருசலேமுக்குச் செல்ல விரும்புவார்கள்.

‘‘திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து: ‘நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம், வாருங்கள். அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார். நாம் அவர் பாதைகளில் நடப்போம்‘ என்பார்கள். ஏனெனில், சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்” (மீகா 4:2).

## 2. இயேசு இந்த ராஜ்யத்தின் ராஜாவாக இருப்பார்.

தேவன் 2.சாமுவேல் 7:12-16ல், தாவீது ராஜாவுக்கு ஒரு வாக்குத்தத்தம் பண்ணினார்.

வசனங்கள் 12-13ல் இவ்வாறு வாசிக்கிறோம்.

”உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும்போது, நான் உனக்குப் பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன். அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான். அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப் பண்ணுவேன்.”

இந்த வாக்குத்தத்தத்தில், அந்த ராஜ்யத்தின் சிங்காசனத்தில் என்றென்றைக்கும் வீற்றிருக்கும் ஒரு சந்ததி இருக்கும் என்றவாக்குத்தத்தம் உள்ளடங்கியிருந்தது. அந்த சந்ததி யாராக இருப்பார் என்று வேதாகமம் எடுத்துக் கூறுகிறது.

லூக்கா நற்செய்தி நூலின் முதல் அதிகாரத்தில், தேவதூதன் மரியாளிடம் தோன்றி, அவளுக்கு ஒரு ஆண் பிள்ளை பிறப்பான் என்றசெய்தி கூறினான். அந்த சிறப்பு மகன் அதிசயமாகப் பிறக்கப்போவதால், அவளுடைய கர்ப்பப்பிறப்பும் அதிசயமாயிருக்கும்.

அந்த மகனின் பெயர் இயேசு என்பாதாக இருக்கவேண்டும் (லூக்கா 1:31).

லூக்கா 1:32-33ல் அவரைக் குறித்து இவ்வாறு வாசிக்கிறோம்:

" கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது''.

மத்தேயு 1:1ல் இயேசுகிறிஸ்து தாவீதின் குமாரன் என்று எழுதப்பட்டுள்ளது.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து திரும்ப வரும்போது அவர் இஸ்ரவேலின் ராஜ்யத்தை மீண்டும் நிலைநிறுத்தி, தாவீது ராஜாவின் சிம்மாசனத்தை நிலைநிறுத்துவார்.

மேலும் தேவனுடைய்ய ராஜ்யத்தின் அரசாட்சியானது எருசலேம் நகரில் ஸ்தாபிக்கப்படும் என்று வேதாகமம் தொடர்ந்து, தெளிவாகப் போதித்து வருகிறது.

''அக்காலத்திலே எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள்'' (எரேமியா 3:17).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் எருசலேமை ''அது மகாராஜாவினுடைய நகரம்'' (மத்தேயு 5:35) என்று அழைத்துள்ளார்.

இதுவரை நாம் வேதாகமத்தின் போதனைகளைக் குறிப்பாக கவனித்தவைகள் எவை என்றால்:

(அ) இயேசு இந்த பூமிக்குத் திரும்பி வரப்போகிறார்.

(ஆ)ஒரு ராஜ்யம் இந்த பூமியின் மேல் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.



(இ) இந்த ராஜ்யத்தின் ராஜா எருசலேமிலிருந்து அரசாளுவார்.

(ஈ) அந்த ராஜா மனிதக் கொள்கைகளை அல்ல, தேவனுடைய கொள்கைகளைக் கொண்டு அரசாளுவார்.

(உ) அனைத்து பூமியின் மேலும் அரசாளுகிறஇந்த ராஜாவை ஒவ்வொருவரும் அறிக்கையிடுவார்கள்.

(ஊ) அந்த ராஜா கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவாக இருப்பார்.

## இயேசு மரித்தோரை உயிரோடே எழுப்புவார்

எபிரெயர் 11-ம் அதிகாரம் வாசித்து வந்தால் உண்மை விசுவாச வாழ்க்கை வாழ்ந்து வந்த அநேக ஆண்களையும் பெண்களையும் பழைய ஏற்பாட்டிலிருந்து பட்டியலிட்டு கூறியுள்ளது. அவர்களில் யாரும் நித்தியஜீவன் என்றவிருதை இன்னும் பெறவில்லை. விசுவாசிகளான அந்த ஆண்களும் பெண்களும் சிலர் மாத்திரம் பேரெழுதப்பட்டுள்ளனர். ஆனால், மற்றும் அநேகர் தேவனுக்கு முன்பாக விசுவாச வாழ்க்கை வாழ்ந்து மரித்துள்ளனர். அந்த அதிகாரத்தில் தொடர்ந்து ''இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை (நித்திய ஜீவன்) அடையாமற் போனார்கள்'' (எபிரெயர் 11:39) என்று நமக்கென்று உறுதிப்படுத்திக் கூறுகிறது.

அவர்கள் நித்திய ஜீவனாகிய வாக்குத்தத்தத்தை எப்படி பெற்றுக்கொள்ள முடியும்?

இயேசுவின் வருகையின்போது மரித்தோரின் உயிர்த்தெழுதல் நடைபெறும். உயிர்த்தெழுதலைக் குறித்த இந்தப் போதனை வேதாகமத்தின் பல இடங்களில் ரூபாந்தரப் படுத்தப்பட்டுள்ளது.

''ஏனெனில், கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்'' (1.தெசலோனிக்கேயர் 4:16).

''பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய

அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்தியநிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்'' (தானியேல் 12:2).

"மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது. அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (யோவான் 5:25).

''இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். ஏனென்றால், பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்'' (யோவான் 5:28).

தேவனை அறிந்து ஜீவித்திருக்கிறவர்களுடனே உயிர்த்தெழுந்த மக்களும் சேர்ந்து நியாயந்தீர்க்கப்படுவார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் அந்த நேரத்தில் நியாயாதிபதியாக இருக்கப்போவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, என்பதை உறுதிப்படுத்துகிறான்.

"நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப் போகிறகர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறேன்'' (2.தீமோத்தேயு 4:1).

இயேசுகிறிஸ்து உண்மையுள்ளவர்களுக்குப் பலன் அளிப்பார், வெளிப்படுத்தின விசேஷத்தில் இயேசுகிறிஸ்து தமது சீஷர்களுக்குக் கொடுத்த கடைசி வார்த்தைகளை வாசிக்கிறோம். தங்களுடைய ஆண்டவரின் வருகைக்கென்று பொறுமையோடே காத்துக் கொண்டிருக்கிறவிசுவாசிகளைத் தேற்றி ஆதரிக்கும்படி அந்த வார்த்தை கொடுக்கப்பட்டது. தமது வாக்குறுதியைக் கொண்டு உற்சாகப்படுத்தும்படி, அவர் தம்மிடம் விசுவாசம் உள்ளவர்களுக்குப் பலன் அளிப்பேன் என்று கூறினார்.

''இதோ, சீக்கிரமாய் வருகிறேன். அவனவனுடைய கிரியைகளின்படி, அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது'' (வெளிப்படுத்தல் 22:12).



ரோமர் இரண்டாம் அதிகாரத்தில், நாம் உண்மையுள்ளவர்களாய் இருந்தால் நித்திய ஜீவனைப் பெறுவோம், ஆனால் நாம் தன்னிஷ்டப்படி சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் நடந்தால் தேவனுடைய கோபாக்கினையை அடைவோம் என்று எழுதியுள்ளது.

ரோமர் 2:6-10ல் நாம் வாசிப்பது:

''தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலன் அளிப்பார். சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார். சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் அநியாயத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கோ உக்கிர கோபாக்கினை வரும். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் பொல்லாங்கு செய்கிறஎந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் எவன் நன்மைச் செய்கிறானோ, அவனுக்கு மகிமையும் சமாதானமும் உண்டாகும்''.

மத்தேயு 25:31-46 இயேசு தமது சீஷர்களுக்குக் கூறின ஒரு உவமையைக் குறித்துக் கூறுகிறது. இந்த உவமையில் செம்மறியாடுகளும் வெள்ளாடுகளுமான இரண்டுவித ஜனங்கள் நியாயத்தீர்ப்பு அடையப் போகிறதைக் குறித்து உதாரணமாகக் கூறப்படுகிறது. செம்மறியாடுகள் தேவனுக்குக் கீழ்ப்படி கிறவர்களையும், வெள்ளாடுகள் கீழ்ப்படியாதவர்களையும் குறிக்கிறது.

உண்மையாயிருந்தவர்கள் நித்திய ஜீவனைப் பெற்று ராஜ்யத்தைச் சுதந்தரித்து கொள்ளுவார்கள் (வ.34); உண்மையாயில்லாதவர்கள் நித்திய மரணத்திலும் (வ்.41) பங்கடைவார்கள்.

யோவான் 5:29, நியாயத்தீர்ப்பில் சிலருக்கு நித்திய ஜீவனும் வேறு சிலருக்கு நித்திய மரணமும் பலனாக கிடைக்கும் என்று கூறுகிறது.

இயேசுகிறிஸ்து திரும்பவும் பூமிக்கு வரும்போது தேவனிடம் உண்மையும் விசுவாசமுமாய் இருந்தவர்களுக்கு நல்ல பலனை

அளிப்பார் என்று சத்திய வேதம் போதிக்கிறது. விசுவாசிகள் நித்தியஜீவனை அடைந்து ராஜ்யத்தில் சந்தோஷமாய் வாழுவார்கள்.

## எப்போது இயேசு மீண்டும் வருவார் ?

இயேசு இந்தப் பூமிக்குத் திரும்ப வருகிறது நிச்சயம் என்று வேதாகமம் உறுதிப்பட கூறுகிறது. அதற்கென்று ஒருநாளை ஏற்கனவே தேவன் குறிப்பிட்டு விட்டார். இந்தச் செய்தியை அப்போஸ்தலர் 17ம் அதிகாரம் உறுதிசெய்கிறது.

"மேலும் (தேவன்) ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயத்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்'' (அப்போஸ்தலர் 17:31).

## ஆனால் அந்த நாள் எப்போது வரும் ?

இயேசு தமது சீஷர்களிடம் அநேக நிகழ்வுகளைக் குறித்துத் தீர்க்கதரிசனமாக உரைத்தார். அந்த தீர்க்கதரிசனத்தில் அவர் உலகிற்குத் திரும்பவும் வரப்போகிறதாகவும், தம்முடைய விசுவாசமுள்ள சீடர்கள் அனைவரையும் கூட்டிச் சேர்ப்பதாகவும் கூறுகிறார்.

''அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின்மேல் வருகிறதைக் காண்பார்கள். அப்பொழுது அவர் தம்முடைய தூதரை அனுப்பி, தாம் தெரிந்து கொண்டவர்களைப் பூமியின் கடைமுனைமுதற்கொண்டு, வானத்தின் கடைமுனை மட்டுமுள்ள நான்கு திசைகளிலிருந்துக் கூட்டிச் சேர்ப்பார்'' (மாற்கு 13:26-27).

மேலும் அவர் தமது சீஷர்களிடம் இது நடக்குங்காலம் தமக்கு தெரியாது என்றும் கூறினார்.

''அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்'' (மாற்கு 13:32).

பின்பு, இயேசு மரித்து உயிர்த்தெழுந்து அழியாமையின்



சரீரத்தைப் பெற்றப்பின், அவருடைய சீஷர்கள் அவரிடம் வந்து, 'இஸ்ரவேலுக்கு ராஜ்யத்தைத் திரும்பிக் கொடுப்பது இக்காலத்திலா ?' என்று கேட்டார்கள் (அப்போஸ்தலர் 1:6). அதற்கு இயெசு கொடுத்த உத்தரவு என்னவெனில்,

''பிதாவானவர் தம்முடைய ஆதினத்திலே வைத்திருக்கிறகாலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல'' (அப்போஸ்தலர் 1:7).

இயேசுகிறிஸ்து திரும்ப வரப்போகிறவேளையை வேதாகமம் குறிப்பிட்டுச் சொல்லாமல், அவர் எப்போது வருவார் என்பதற்கான அடையாளங்களை மாத்திரம் கூறுகிறது.

## இயேசுகிறிஸ்து மீண்டும் வருவதற்கான அடையாளங்கள்:

இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய ''சிறப்பான'' மக்களாவர். தேவன் அவர்கள் மூலமாய் தமது வல்லமையை வெளிப்படுத்தும்படி அவர்களைப் பயன்படுத்தினார். இஸ்ரவேலரைத் தமது ஜனங்களாக அவர் நடத்தினதின் மூலம் தமது வார்த்தையின் உண்மையை விளங்கப்பண்ணினார்.

''நானே அவர் என்று உணர்ந்து, நீங்கள் அறிந்து விசுவாசிக்கும்படிக்கு, நீங்களும் நான் தெரிந்து கொண்ட என் தாசனும் எனக்குச் சாட்சிகளாய் இருக்கிறீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். எனக்கு முன் ஏற்பட்ட தேவனில்லை, எனக்குப்பின் இருப்பதும் இல்லை'' (ஏசாயா 43:10).

அந்த ஜனங்கள் சிதறடிக்கப்படுவார்கள் என்று தேவன் முன்மொழிந்தார்.

"கர்த்தர் உன்னைப் பூமியின் ஒரு முனைத் துவக்கி பூமியின் மறுமுனை மட்டும் இருக்கிறஎல்லா ஜனங்களுக்குள்ளும் சிதறஅடிப்பார். அங்கே நீயும் உன் பிதாக்களும் அறியாத மரமும் கல்லுமான அந்நிய தேவர்களைச் சேவிப்பாய்'' (உபாகமம் 28:64).

மேலும், அந்த ஜனம் மீண்டும் சேர்க்கப்படுவார்கள் என்று தேவன் கூறினார்.

“ஜாதிகளே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, தூரத்திலுள்ள தீவுகளில் அறிவித்து, இஸ்ரவேலரைச் சிதறடித்தவர் அதைச் சேர்த்துக் கொண்டு, ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும் வண்ணமாக அதைக் காப்பார் என்று சொல்லுங்கள்“ (எரேமியா 31:10).

யூதர்கள் மீண்டும் வரவழைக்கப்பட்டு கூடிவந்து இஸ்ரவேல் தேசத்தில் குடியேறுவார்கள் என்று வேதாகமம் திட்டமும் தெளிவுமாகப் போதிக்கிறது.

மேலும் இயேசு கூறினார், எருசலேம் சில காலங்களுக்கு அந்நிய அதிகாரத்திற்குக் கீழடங்கியிருக்கும். ஆனால் அது என்றைக்கும் அல்ல.

“புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்“ (லூக்கா 21:24).

மேலும் இயேசு கூறினார், அது நடந்தேறினவுடன் மனுஷகுமாரன் திரும்பி வருவார்.

“அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருகிறதைக் காண்பார்கள்“ (லூக்கா 21:27).

கி.பி. 70-ம் வருஷத்தில் யூதர்கள் எருசலேமின் கட்டுப்பாட்டை இழந்தனர். ரோமர் தங்களுடைய சேனையைக் கொண்டு இஸ்ரவேலை ஊடுருவி பழிவாங்கினதினிமித்தம் யூதர்கள் சிதறடிக்கப்பட்டு பூமியின் ஒரு முனைமுதல் மறுமுனைவரை தங்கள் ஜீவன் தப்ப ஓடினார்கள். ஆனால் அது அப்படியே நீடிக்கவில்லை. கி.பி. 1967ல் யூதர்கள் அரேபியரின் கட்டுப்பாட்டிலிருந்து எருசலேமை விடுவித்தார்கள். சுமார் 1900 ஆண்டுகளாக எருசலேம் புறஜாதி அதிகாரங்களால் மிதிக்கப்பட்டு வந்தது. ஆனாலும் இஸ்ரவேலர் இறுதியில் எருசலேமைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். 1948.ம் ஆண்டில் இஸ்ரவேல் தேசம் உலக ஐ.நா. சபையால் ஒரு தனி ராஜ்யமாக அங்கீகாரம் பெற்றது.



இயேசு கூறினபடி, சிதறிப்போன யூதர்கள் மீண்டும் தங்கள் தேசத்துக்கு வந்து எருசலேமைச் சுற்றி குடியேறினது எப்படி உண்மையாயிற்றோ, அது போலவே அவருடைய வருகையும் அவர் சொன்னபடியே நடக்கும் என்பது நிச்சயமாயிற்று.

இந்த வேதாகமப் போதனையை நாம் சரியாகப் புரிந்து கொள்வது மிகமிக முக்கியம். உண்மையில் அப்போஸ்தலனாகிய பேதுரு இந்த முக்கிய போதனையைப் பரியாசம் பண்ணும் ஜனங்கள் எழும்பும் காலம் வருமென்று எச்சரித்துள்ளான்.

“முதலாவது நீங்கள் அறியவேண்டியது என்னவெனில்: கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து, ‘அவர் வருவார் என்று சொல்லும் வாக்குத்தத்தம் எங்கே ? பிதாக்கள் நித்திரை அடைந்த பின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாய் இருக்கிறதே‘ என்று சொல்லுவார்கள்“ (2.பேதுரு 3:3-4).

தனது நிருபத்தை வாசித்த ஜனங்களுக்கு அப்போஸ்தலனாகிய பேதுரு கொடுத்த எச்சரிப்பு என்னவெனில், தேவன் தமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்ப தாமதிப்பதனால், தேவன் தமது வாக்குத்தத்தத்தை “மறந்து போனது“ போல் காணப்பட்டாலும், தேவன் தம்முடைய வார்த்தையை நிறைவேற்றுகிறதிலும், தாம் சொன்னபடியே செய்கிறதிலும் உண்மையுள்ளவராய் இருக்கிறார்.

வேதாகமப் போதனைகளைப் பரியாசம்பண்ணி சிரிக்கிறஜனங்கள் வருகிறஒரு காலகட்டம் வந்தாலும், தேவன் தமது வாக்குத்தத்தத்தை மறந்து விடமாட்டார். அவர்களுடைய பரியாசங்கள் வேதாகமப் போதனையையும் இயேசுகிறிஸ்துவின் மீண்டும் வருகையையும் மாற்றிவிட முடியாது. உண்மையில் இதன் பின்னணியில் தேவன் நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கிறார் என்பதைப் பேதுரு வலிமையாகச் சுட்டிக் காண்பிக்கிறான்.

“தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாய் இராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமை உள்ளவராய் இருக்கிறார்“ (வ-.9).

தேவன் நம்மைத் தமது ராஜ்யத்தில் சேரும்படி அழைக்கிறார். இயேசுகிறிஸ்து இப்பொழுது வருவாரானால் நீ அந்த ராஜ்யத்தில் பிரவேசிக்க ஆயத்தமா ? அப்படி இல்லயென்றால், "தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்" (வ-12) என்றஆலோசனையின் படி உனக்கிருக்கும் இந்த வேளையிலாவது உன்னை ஆயத்தப்படுத்திக் கொள். தேவனுடைய குமாரன் சீக்கிரமாக வரப்போகிறபடியால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.

***

**"இயேசுகிறிஸ்து மீண்டும் வருகிறார்" என்றஇந்த சிறுநூலைப் படித்தபின் நீங்கள் பதில் எழுதியனுப்பவேண்டிய கேள்விகள்:**

1. இயேசுகிறிஸ்து மீண்டும் இந்த உலகிற்குத் திரும்புவார் என்றவாக்கின் ஆதாரங்களை யார்யார் கூறினர் ?
2. இயேசுகிறிஸ்து மீண்டும் உலகிற்கு வரும்போது எந்த நான்கு காரியங்களைக் குறிப்பாக நிறைவேற்றுவார் ?
3. இயேசு எந்த இடத்தை மையமாகக் கொண்டு, தமது ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் ? அப்போது மனிதரில் காணப்படும் மாற்றம் எதுவாக இருக்கும் ?
4. தேவனுடைய ராஜ்யத்தின் ராஜாவாக இயேசு இருக்கப்போவதன் வேத ஆதாரங்கள் எவை ?
5. அவர் வரும்போது ஏன் மரித்தவர்களை உயிரோடே எழுப்புவார் ?
6. உண்மை விசுவாசிகளுக்கு எந்த அடிப்படையில் தேவன் கொடுக்கும் பலனை அவருடைய குமாரன் கொண்டு வருவார் ?
7. இயேசு கிறிஸ்து திரும்ப வருவார் என்பதற்கு அடையாளம் என்ன ?



| | |
|---|---|
| The Communications and Literature requests from Readers in Karnataka, Kerala & Tamilnadu | **கர்நாடகம், கேரளா, மற்றும் தமிழ்நாடு பொது தொடர்பு விலாசம்** |
| **The Christadelphians,**<br>P.O. Box 4237,<br>Bangalore - 560042. INDIA. | **கிறிஸ்டடெல்பியன்ஸ்**<br>**தபால் பெட்டி எண் 4237**<br>**பெங்களூர் 560042,**<br>**இந்தியா** |
| **<u>Elsewhere :</u>** | <u>இதர மாநிலங்கள்:</u> |
| **The Christadelphians,**<br>G.P.O. Box 159,<br>Hyderabad, A.P. 500001<br>India | **கிறிஸ்டடெல்பியன்ஸ்**<br>**தபால் பெட்டி எண் 159**<br>**ஐதராபாத், ஆந்திரா 500001**<br>**இந்தியா** |
| **The Christadelphians,**<br>P.O. Box 60,<br>Negombo - 11500,<br>SRI LANKA | **கிறிஸ்டடெல்பியன்ஸ்**<br>**தபால் பெட்டி எண் 60**<br>**நெகொம்போ - 11500**<br>**ஸ்ரீலங்கா** |
| **The Christadelphians,**<br>P.O. Box 9052,<br>Banani, DAKA - 1213<br>BANGLADESH | **கிறிஸ்டடெல்பியன்ஸ்**<br>**தபால் பெட்டி எண் 9052**<br>**பனானி, டாக்கா - 1213**<br>**பங்களாதேஷ்** |